செ.வெ.எண்:14/2019 நாள்:07.08.2019

**பத்திரிக்கைச் செய்தி**

அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் சேரவும் அரசு உதவி பெறும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் சுயநிதி தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் சேர்ந்திட இரண்டாம் கட்ட மாவட்ட கலந்தாய்வு மூலம் நடைபெறும் மாணவர்கள் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் 20.08.2019 வரை www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக வரவேற்கப்படுகின்றன.

சிவகங்கை அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பற்றவைப்பவர், கணினி இயக்குபவர், கம்மியர் மோட்டார் சைக்கிள் மற்றும் தையல் தொழில்நுட்பம் ஆகியப் பிரிவுகளில் காலியாக உள்ள இடங்களுக்கு 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியர்களும், காரைக்குடி அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் கடைசலர், இயந்திர வேலையாள், தொழிற்சாலை வர்ணம் பூசபவர், கணினி இயக்குபவர் ஆகிய தொழிற் பிரிவுகளுக்கு 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியர்களும், உலோகத்தகடு வேலையாள், பற்றவைப்பவர் ஆகிய பிரிவுகளுக்கு 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியர்களும், ஆன்லைனில் **(ONLINE)** 20.08.2019-க்குள் விண்ணப்பிக்கலாம்.

இங்கு சேரும் மாணவ மாணவிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா மடிக்கணினி, சைக்கிள், பேருந்து பயணச்சலுகை அட்டை, மாதாந்திர கல்வி உதவித் தொகை, சீருடைகள், பாடப்புத்தகங்கள், வரைபடகருவிகள் இலவசமாக வழங்கப்படும். மேலும், பயிற்சி முடிவுற்றவுடன் தேர்ச்சி பெற்ற அனைத்து பயிற்சியாளர்களுக்கும் தமிழகத்திலுள்ள முன்னணி தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கப்படும். மேலும், விபரங்களுக்கு முதல்வர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், முத்துப்பட்டி, சிவகங்கை என்ற முகவரியிலோ, **91506 11756** என்ற அலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம் என அரசினர் தொழிற் பயிற்சி நிலைய முதல்வர் கே.மோகனசுந்தரம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**மின்னஞ்சல் prlsvgcopa@gmail.com**

**::வெளியீடு::**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**சிவகங்கை.**